Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C.No:- 62 /2020 Date:- 18.06.2026

Deposition of witness for prosecution :- PW :-2

| | | | |
|---|---|---|---|
| Name | கோபால் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 04.05.2019 தேதியன்று நான் கோபி மதுவிலக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நானும் தலைமை காவலர்கள் கிருஷ்ணசாமி, ராஜேந்திரன் ஆகியோருடன் மதுவிலக்கு குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு சத்தியமங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடவள்ளி, வடக்குபேட்டை, ஆகிய பகுதிகளில் ரோந்து அலுவலில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி கொண்டப்பநாயக்கன்பாளையம் எதிரியின் வீட்டின் அருகே கண்காணித்த போது ஒரு நபர் மண்மொடா மற்றும் மண் அடுப்பை அழித்துக்கொண்டிருந்தார்.

2. போலிஸ் பார்டியான எங்களை கண்டவுடன் தப்பித்து ஓட முற்பட்டவரை நாங்கள் பிடித்து விசாரித்த போது அவர் பெயர் மூர்த்தி என்றும், அவர் மாரியம்மன் கோவில் வீதி கொண்டப்பநாய்க்கன்பாளையத்தில் வசித்து வருவதாக கூறினார்.

3. அவரை பரிசோதனை செய்தபோது சுமார் 5லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கேனில் அவர் வைத்திருந்த திரவத்தை முகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் கூடிய

சாராய வாடை அடித்தது. அது குறித்து விசாரித்த போது ஒரு வாரத்திற்குமுன் கடுக்காய், பேட்டரிசெல்கள், ஊமத்த இலைகள் மற்றும் வெள்ளை வேலாம்பட்டை ஆகியவற்றைக் கொண்டு அதிக போதை வேண்டி ஊறல் போட்டதாகவும், அவற்றை கொண்டு சாராயம்காய்ச்சி 5லிட்டர் விஷ சாராயம் காய்ச்சி சுமார் 5லிட்டர் பிளாஸ்டிக் கேனில் 2 1/2 லிட்டர் எடுத்து வைத்திருந்தாக கூறினார்.

4. பின்னர் அவரை காரணம் கூறி கைதுசெய்து பின் எதிரி தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தலைமை காவலர்கள் கிருஷ்ணசாமி, இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அவர்களிடம் சாட்சி கையெழுத்து பெற்றேன்.

5. பின்னர் 04.05.2019–ம் தேதியன்று 18.45 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 5 லிட்டர் பிடிக்ககூடிய மஞ்சள் நிற பிளாஸ்டிக் கேனில் விஷ நெடியுடன் கூடிய விஷ சாராயம் 2லிட்டர், சுமார் 25 லிட்டர் பிடிக்கக்கூடிய செம்பு குண்டா ஒன்று, 25 லிட்டர் பிடிக்ககூடிய அலுமினிய குண்டா ஒன்று, பிளாஸ்டிக் டிரம்ப் ஒன்று, வானா போசி ஒன்று ஆகியவற்றை சாட்சிகள் இராஜேந்திரன், கிருஷ்ணசாமி முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** பின்னர் எதிரியின் பிடிபொருட்களுடன் நிலையம் வந்து மதுவிலக்கு காவல் நிலைய குற்ற எண் 432/2019 பிரிவுகள் 4(1)(a),4(1)(b),4(1)(g),4(1–A) TNP ACT–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** பின்னர் கைப்பற்றிய விஷ சாராயத்தில் இருந்து ரசாயன பரிசோதனைக்கு அனுப்ப தலா 375 மி.லிட்டர் பிடிக்ககூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் மாதிரி எடுத்து A,B என தனித்தனியே குறியிட்டு வெள்ளை துணியால் சுற்றி SHO SEAL வைக்கப்பட்டது. மீதம் இருந்த 2.25 மி.லி விஷ சாராயம் சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டது.

8. பின்னர், கைப்பற்றிய சொத்துக்கு படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த படிவம் 91 **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 25 லிட்டர் பிடிக்கக்கூடிய செம்பு குண்டா ஒன்று **அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

25 லிட்டர் பிடிக்ககூடிய அலுமினிய குண்டா ஒன்று **அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிளாஸ்டிக் டிரம்ப் ஒன்று **அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வானா போசி ஒன்று **அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**9.** பின்னர் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட மாதிரிகள் விஷ தன்மை இல்லை என்று பகுப்பாய்வு அறிக்கை வந்தது அந்த அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**10.** மாதிரிகளில் விஷதன்மை இல்லை என்று வந்ததால் இந்த வழக்கு சட்டப்பிரிவுகளான 4(1)(a),4(1)(b),4(1)(g),4(1–A) TNP ACT–ல் இருந்து 4(1)(a),4(1)(b),4(1)(g), TNP ACT–ன் ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**11.** பின்னர் எனது புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரியின் மீது 4(1)(a),4(1)(b),4(1)(g), TNP ACT–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை நான் தான் என்றால் சரிதான். அதே போல் நான் தான் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து புலன் விசாரணை செய்து குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யகூடாது என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கில் நான் அழித்தல் மகஜர் தயார் செய்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் GD பதிவை நான் கூறவில்லை என்றால் சரிதான்.

3. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்த இடம் எதிரியின் வீட்டிற்கு அருகில் நடைபெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் வீட்டில் வைத்து பொருட்களை கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. இவ்வழக்கில் நான் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் புள்ளிவிபர கணக்கிற்காக எதிரியிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிரி எவ்விதமான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை ,எந்த பொருள்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரிகளின் ஆணைக்கிணங்க புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யான இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மபந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப் பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.